**பாடம் - 10** | **الدرس العاشر**

**ஃபஜ்ருடைய சுன்னத்** | **ركعات الفجر**

நபி(ஸல்) அவர்கள் வழமையாகத் தொழுது வந்த ராத்திபு சுன்னத்துகளில் அவர்கள் ஊரில் இருக்கும் போதும் சரி பயணத்தில் இருக்கும்போதும் சரி விடாமல் பேணி வந்த சுன்னத் ஃபஜ்ருடைய முன் சுன்னத் ஆகும்.

عَنْ عَائِشَةَ رضي الله عنها: أَنَّ النَّبِيَّ ﷺ لَمْ يَكُنْ عَلَى شَيْءٍ مِنَ النَّوَافِلِ أَشَدَّ مُعَاهَدَةً مِنْهُ عَلَى رَكْعَتَيْنِ قَبْلَ الصُّبْحِ. (متفق عليه: ١١٦٣,٧٢٤)واللفظ له

'நபில் தொழுகைகளில் சுப்ஹுக்கு முன்னுள்ள இரண்டு ரக்அத்தை விட வேறு எதையும் நபி (ஸல்) அவர்கள் அதிகம் பேணியதில்லை' என ஆயிஷா (ரலி) கூறுகிறார்கள். (புகரி-1163, முஸ்லிம்-724)

"لَهُمَا أَحَبُّ إِلَيَّ مِنَ الدُّنْيَا جَمِيعًا"–رواه مسلم:٧٢٤

அது பற்றி நபி(ஸல்) அவர்கள் கூறும்போது 'அந்த இரண்டு ரக்அத்தும் இவ்வுலகில் உள்ள அனைத்தையும் விட எனக்கு மிக விருப்பமானதாகும்' என்று கூறினார்கள். (முஸ்லிம்-724)
இத்தொழுகையில் முதல் ரக்அத்தில் 'குல் யாஅய்யு ஹல் காஃபிரூன்' என்ற அத்தியாயத்தையும் இரண்டாம் ரக்அத்தில் 'குல்ஹுவல்லாஹு அஹத்' என்ற அத்தியாயத்தையும் ஓதுவது சுன்னத்தாகும்.
இவ்விரண்டு ரக்அத்தையும் சுருக்கித் தொழுவது சுன்னத்தாகும். ஏனெனில் நபி(ஸல்)இவ்வாறு செய்துள்ளார்கள். ஒருவர் இவ்விரு ரக்அத்தையும் பஜ்ருக்கு முன் தொழத் தவறினால் அவ்விரண்டையும் பஜ்ருக்குப் பிறகு கழாச் செய்து கொள்ளலாம். ஆனாலும் சூரியன் உதயமாகி ஒரு ஈட்டி அளவு உயர்ந்த பிறகி லிருந்து சூரியன் உச்சி சாய்வதற்கு முன்பு வரை கழாச் செய்வது சிறப்பாகும்.

**ளுஹா தொழுகை**

ளுஹா தொழுகை என்பது அவ்வாபீன் தொழுகையாகும். இத்தொழுகை வலியுறுத்தப்பட்ட சுன்னத்தாகும். ஏராளமான நபிமொழிகளில் இத்தொழுகை பற்றி ஆர்வமூட்டப்பட்டுள்ளது. நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்:

عَنْ أَبِي ذَرٍّ ﷺ عَنْ النَّبِيِّ ﷺ أَنَّهُ قَالَ يُصْبِحُ عَلَى كُلِّ سُلَامَى مِنْ أَحَدِكُمْ صَدَقَةٌ فَكُلُّ تَسْبِيحَةٍ صَدَقَةٌ وَكُلُّ تَحْمِيدَةٍ صَدَقَةٌ وَكُلُّ تَهْلِيلَةٍ صَدَقَةٌ وَكُلُّ تَكْبِيرَةٍ صَدَقَةٌ وَأَمْرٌ بِالْمَعْرُوفِ صَدَقَةٌ وَنَهْيٌ عَنْ الْمُنْكَرِ صَدَقَةٌ وَيُجْزِئُ مِنْ ذَلِكَ رَكْعَتَانِ يَرْكَعُهُمَا مِنَ الضُّحَى (م/ ٧٢٠)

'உங்களில் ஒருவரது ஒவ்வொரு மூட்டுக்கும் தர்மம் உண்டு. சுப்ஹானல் லாஹ் என்று சொல்வதும் தர்மம் ஆகும். அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்வதும் தர்மமாகும். லாயிலாஹ இல்லல்லாஹ் என்று சொல்வதும் தர்மமாகும். அல்லாஹு அக்பர் என்று சொல்வதும் தர்மம், நன்மையை ஏவுவதும் தர்மம், தீமையைத் தடுப்பதும் தர்மமே. இவையனைத்திற்கும் நண்பகலில் இரண்டு ரக்அத் (ளுஹா) தொழுவது போதுமானதாகும்'. அறிவிப்பவர்: அபூதர்(ரலி), நூல்: முஸ்லிம்-720

عَنْ أَبِي هُرَيْرَةَ ﷺ قَالَ: أَوْصَانِي خَلِيلِي بِثَلَاثٍ لَا أَدَعُهُنَّ حَتَّى أَمُوتَ: صَوْمِ ثَلَاثَةِ أَيَّامٍ مِنْ كُلِّ شَهْرٍ، وَصَلَاةِ الضُّحَى ، وَنَوْمٍ عَلَى وِتْرٍ . (خ/ ١١٧٨، م/ ٧٢١)

'என் நண்பர் (நபியவர்கள்) எனக்கு மூன்று விஷயங்களை அறிவுறுத்தினார். நான் மரணிக்கும் வரை அவற்றை விடமாட்டேன். அவை, ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பது, ளுஹா தொழுவது, தூங்கும் முன் வித்ரைத் தொழுதுவிடுவது ஆகியவையாகும்.'அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி (1178), முஸ்லிம்(721)
ளுஹா தொழுவதற்குச் சிறந்த நேரம் சூரியன் உச்சியை நோக்கி உயர்ந்து கொண்டு அதன் வெப்பம் அதிகரித்துக் கொண்டிருக்கும் பொழுதாகும். சூரியன் உச்சிக்கு வந்துவிட்டால் அதன் நேரம் முடிவடைந்துவிடும். ளுஹா தொழுகை குறைந்தபட்சம் இரண்டு ரக்அத்தாகும். அதற்கு மேல் எவ்வளவு வேண்டுமானாலும் தொழலாம். அதற்கு வரையறை இல்லை.